**OS.No.37/2021**

**PW1 : திரு. எமர்சன் கோயில்சிங்**

**W/o. திரு.  சாமுவேல் தர்மக்கண்**

**dt:** 16.07.2026

இ.ம.எண்.5/2026

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே எனது தரப்பில் 7 ஆவணங்களை குறியீடு செய்துள்ளேன். 16.07.2026 அன்று மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, **மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வா.சா.1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | 05.11.1974 தேதியில் வேதமாணிக்கம் நாடார், சாமுவேல் தர்மக்கண் ஆகியோர்களுக்கு ஏசுவடியாள், அற்புதம் ஆகிய இருவரும் பிறப்பித்துக் கொடுத்த பதிவு செய்யப்படாத பாகவிடுதலை தஸ்தாவேஜ் | அசல் |
| வா.சா.ஆ.9 | புல எண்.564/10 ஐ பொறுத்து வேதமாணிக்கம் நாடார் பெயரில் உள்ள சிட்டா. | அசல் |

(வா.சா.8 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதாலும், வா.சா.9 ஆவணம் முழுமையான ஆவணம் இல்லை என்பதாலும் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதற்கு 8, 9, 11 மற்றும் 13 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது).

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd) M. Siva Rajesh, 16/07/2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.